# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் இயங்கும் **ஆண்டிமடம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில்** படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாலை நேரத்தில் இரு சக்கர வாகன பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பயிற்சிக்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

குறைந்தபட்ச கல்வி தகுதி 5-ம் வகுப்பு தேர்ச்சி, மேல்நிலைப்படிப்பு எதுவாகவும் இருக்கலாம், குறைந்த பட்ச வயது 18 நிரம்பி இருக்கவேண்டும், அதிக பட்ச வயது உச்ச வரம்பின்றி பயிற்சி பெறலாம், ஆண், பெண் இருபாளர்களுக்கும் பயிற்சிகள் கலந்துகொள்ளலாம்.

குறுகிய கால பாடத்திட்டத்தின்படி மத்திய மாநில அரசு சான்றிதழ் வழங்கப்படும், பயிற்சி காலம் 4 மாதம் (300 மணி நேரம்), வகுப்புகள் நடைபெறும் இடம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் ஆண்டிமடம் மாலை 03.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை.

பயிற்சி காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் மாத ரூ.3,000/- உதவித்தொகையாக இலவசமாக அரசால் வழங்கப்படும். இலவச திறன் பயிற்சி பெறுபவர்களுக்கு போக்குவரத்து செலவு நாள் ஒன்றுக்கு ரூ.100/-வீதம் வழங்கப்படும். பயிற்சி முடித்தவர்கள் சொந்தமாக தொழில் தொடங்க அரசின் சான்றிதழ் மிக பொறுத்தமாக அமைவதுடன் (Without Security Deposit). சுயதொழில் தொடங்க எந்தவித பிணையத் தொகை இல்லாமல் அரசு கடன் வழங்கப்படும் என ஆண்டிமடம் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.